**செ. கு. எண்:075** **நாள்: 04.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 4.6.2017

நீலகிரி மாவட்டம், நடுவட்டம் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.R.சுதேவன்;

சேலம் மாநகரம், கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. M.மசூத்கான்;

கடலூர் மாவட்டம், ஆயுதப்படை, வாகனப்பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R.தமிழ்செல்வம்;

சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை-1. எ-நிறுமம், **43**ம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி M.சீதா; ஆயுதப்படை-1. ஆ-நிறுமம், **12**ம் அணியில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A.G சுப்ரமணியன்;

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. P.சுந்தர்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகர் காவல் நிலையத்தில், காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. G. ராஜராஜன்;

--------ஆகிய காவலர்கள் பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், மரகதபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தர்மலிங்கம் என்பவரின் மகன் திரு. வேலாயுதம் மற்றும் திரு. வில்வமணி என்பவரின் மகன் திரு. மகாதேவன்;

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உல்லத்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மகன் திரு. ஆர். ராஜேந்திரன்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சூரக்குடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு ஆர். ராஜுநாயுடு என்பவரின் மகன் திரு. வெங்கடாசலம்;

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆதனக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதமுத்து என்பவரின் மகன் திரு. வீரையன்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், சின்னதண்டரகுண்டா கிராமத்தைச் சேர்ந்த திரு. கோடியப்பா என்பவரின் மகன் திரு. வெங்கடேஷ்;

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், மருதாலம் மதுரா தானியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேட்டு என்பவரின் மகன் திரு.சுரேஷ்;

--------ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**